**மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவச்சபை - 2023**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவச்சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான

வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை சபையினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 55 இற்கு இணங்க நிறுவனத்தினால் நிதிக் கூற்றுக்களில் விடயங்கள் சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல்கள் திருத்தப்பட்ட போது செய்முறை அல்லாதவை தவிர ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு வகைப்படுத்தலின் தன்மை, வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விடயங்கள் அல்லது விடய வகுப்பின் பெறுமதி மற்றும் மீள்வகைப்படுத்துவதற்காக காரணங்கள் ஆகிய விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் சபையினால் நிதிச் செயலாற்றல் கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் 2022 ஆண்டிற்குரிய பெறுமதிகளை மீள்வகைப்படுத்தல் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விடயங்கள் அல்லது விடயம் வகுப்பின் பெறுமதி மீள்வகைப்படுத்தப்பட்டு 2024 ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 79 இற்கு இணங்க நடைமுறைச் சொத்துக்களுக்கு அவை அறிக்கையிடும் தினத்திலிருந்து 12 மாதங்களுக்குள் தேறக்கூடியவை என எதிர்பார்க்காவிடின் பொதுவான செயற்பாட்டு வட்டத்தினுள் தேறுவதற்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் அடங்குவதாக இருந்த போதிலும் ரூபா 1,350,000 தொகைக்கான அறவிடப்பட முடியாத 02 வருடங்களை விட பழமையான வாடகை வைப்புத் தொகை நடைமுறை அல்லாத சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வெளித் தரப்பினர் ஒருவரிமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடத்திற்கான பாதுகாப்பு வைப்புத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், ஒரு வருடத்தினுள் இந்த தொகையை அறவீடு செய்வதற்கு முடியாமையால் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என காட்டப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 80(இ) இற்கு இணங்க அறிக்கையிடல் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் தீர்க்கப்படவுள்ள பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்புக்கள் என இனங்காண வேண்டியிருந்த போதிலும் பணிக்கொடை ஒதுக்கம் தொடர்பாக நடைமுறை பொறுப்புக்களின் எண்ணிக்கை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் எண்ணிக்கை சபையின் கணிப்பின் படி முறையே ரூபா 3,158,020 தொகை மற்றும் ரூபா 28,958,085 தொகையாக காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் அவை முறையே ரூபா 1,421,150 தொகை மற்றும் ரூபா 30,694,957 தொகை என காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடை ஒதுக்கங்கள் தொடர்பாக நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் எண்ணிக்கை 2024 ஆண்டு முதல் சரி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடைமுறை பொறுப்புக்கள் மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் சரியாக இனங்காண வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பந்தி 47 இற்கு முரணாக 2022 ஆண்டில் நீதி அமைச்சினால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட ரூபா 9 மில்லியன் தொகை பெறுமதியான மோட்டார் வாகனமொன்று, நிதிக் கூற்றுக்களில் இனங்காணும் போது ஏற்பட்ட தவறினை சரி செய்யும் போது கடந்த காலத்திற்கு ஏற்றவாறு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், மேலும் ஒரு வாகனம் தொடர்பாக மீள்மதிப்பீட்டு மிகை ஆகிய ரூபா 3,500,000 தொகை மீளாய்வாண்டின் போது பிழையான முறையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைத்து திரண்ட வருமானம் மற்றும் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த நியமத்திற்கு முரணாக 2010 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் மற்றும் 2022 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பான வருடாந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதியாகிய ரூபா 119,200,000 இற்கான முன்னைய ஆண்டின் கணக்கீடு செய்தல் வழுவினை சரி செய்யும் போது ரூபா 3,125,000 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைத்து, திரண்ட வருமானம் மற்றும் செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிந்தது. இந்த நியமங்களின் | 2024 ஆண்டின் போது தேவையான வெளிப்படுத்தல்கள் மற்றும் சரி செய்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பிழைகளை சரி செய்தல் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | படி அந்த தவறினை சரி செய்த போது கடந்த காலத்திற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்களில் அந்த சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மேற்கூறிய கட்டிடங்களின் பெறுமதி தொடர்பாக நடைமுறை ஆண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 116,075,000 தொகை நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் இனங்கண்டிருந்த போதிலும் பிழையான முறையில் மீளாய்வாண்டில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைத்து திரண்ட மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பந்தி 54 இற்கு முரணாக, காசுப் பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டில் ஒப்பீட்டு ரீதியான ஆண்டு என சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2022 ஆண்டின் 07 விடயங்கள் தொடர்பாக சரி செய்தல்கள், பெறுமதிகளை மீண்டும் வெளியிடுதல் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 50 இற்கு இணங்க ஒரே தன்மையுடைய மற்றும் ஒரே பயன்பாடுடைய ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான வகுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 10,465,399 இற்கான அலுவலக உபகரணங்களின் ஆரம்ப மீதியில் அடங்கியுள்ள கணினித் துணைக் கருவிகளின் பெறுமதியை இனங்காண முடியாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது கணினி துணைக் கருவிகள் சேர்த்தல் என ரூபா 446,000 தொகை அலுவலக உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு முதல் கணினி துணைக் கருவிகளின் பெறுமதி அலுவலக உபகரணங்களில் இருந்து வேறுபடுத்தி சமர்ப்பிக்கப்படும் எனவும், இது தொடர்பான வெளிப்படுத்தல்கள் 2024 ஆண்டிற்கான நிதிக் கூற்றில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களின் படி சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 65 இற்கு இணங்க சொத்தொன்றின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலத்தை கழித்து அனைத்து வருடாந்த | 2024 ஆண்டில் குறிப்பிட்ட சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட சொத்துக்கள் மீளாய்வு |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையிடும் காலப் பகுதியொன்றின் இறுதித் திகதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறுமானத் தேய்வு கழித்து முடிவடைந்திருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்துவற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 6,603,245 தொகை பெறுமதியான மின்உயர்த்தி மற்றும் ரூபா 851,711 தொகை பெறுமதியான நோயாளர் காவு வண்டி மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன்படி, இந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் படி திருத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பந்தி 44 இற்கு இணங்க வழங்கப்பட்டிருந்த ரூபா 12,750,000 இற்கான மூலதன மானியங்கள் சரியாக சொத்துக்கள் என இனங் காணப்பட்டிருந்த போதிலும், வருவாய் என இனங்காண்பதற்கு பதிலாக திரண்ட மூலதன மானியம் என இனங்காணப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மூலதன மானியங்கள் இனங்காண வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டின் வருமானச் செலவுக் கூற்றில் பிற்போடப்பட்ட வருவாய் மற்றும் ஆண்டிற்கான பெறுமானத தேய்வு என இனங்காணப்பட்டிருந்த ரூபா 132,560,770 தொகை நிதிச் செயலாற்றுகை கூற்றில் 2022 ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. இது தொடர்பான நாட்குறிப்புப் பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், அதற்கான வெளிப்படுத்தல்களும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பாக சரி செய்தல்கள் மற்றும் உரிய வெளிப்படுத்தல் 2024 நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்வதற்குரிய நாட்குறிப்பு பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் | நிதி நிலைமைக் கூற்றில் 2022 ஆண்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் திரண்ட வருமானம் மற்றும் செலவு கணக்கின் இறுதி | உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் சமர்ப்பிக்கப்படுகின்ற மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பீட்டு ரீதியான ஆண்டாகிய 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் திரண்ட வருமானம் மற்றும் செலவுக் கணக்கின் இறுதி மீதிகள் முறையே ரூபா 5,728,922,708 தொகை மற்றும் ரூபா (8,139,958) தொகை எனினும், அதற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற 2022 ஆண்டின் அந்த கணக்கு மீதிகள் இரண்டும் முறையே ரூபா 5,716,422,708 தொகை ரூபா 4,360,042 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 12,500,000 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மீதிக்கு 2022 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களின் பெறுமதியினை அகற்றி கணக்கீடு செய்யப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | திரண்ட வருமானம் மற்றும் செலவுக் கணக்குகளில் இறுதி மீதி அதற்கு நேரொப்ப சமர்ப்பிக்கப்படுகின்ற நிதி நிலைமைக் கூற்றின், இறுதி மீதிகளுடன் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (இ) | சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றக் கட்டிடத்தில் கட்டமைப்பு சார் சிக்கல்களை திருத்த வேலை மேற்கொள்ளல் மற்றும் நீதிபதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தளக் கட்டிடத்தின் தரை மாடியில் அமைந்துள்ள கராஜின் கொங்கிரீட் சிலப்பின் திருத்தி வேலை மேற்கொள்வது தொடர்பாக நீதி அமைச்சினால் நேரியாக செலுத்தியிருந்த தொகைகள் முறையே ரூபா 1,492,884 தொகை மற்றும் ரூபா 3,431,070 தொகையாக காட்டப்பட்டதுடன், அதனை கணக்கீடு செய்வதற்கு மற்றும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இரண்டு கருமங்களும் நீதி அமைச்சின் 2023 ஜுன் 02 திகதிய MOJ/AC/11/08/23 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் மற்றும் தேவையான ஏற்பாடுகள் அமைச்சினால் செலுத்தப்படும் என வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டதால் மேற்கொள்ளப்பட்டதுடன், சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் பில் பத்திரம் கொடுப்பனவிற்காக ரூபா 1,492,884 தொகை உறுதிச் சீட்டு இலக்கம் P231284 மூலமும் நீதிவான்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தள கட்டிடத்தின் தரை மாடியில் அமைந்துள்ள கராஜின் கொங்கிரீட் சிலப் இன் திருத்த வேலைக்கான பில் பத்திரம் ரூபா 3,431,070 தொகை உறுதிச் சீட்டு இலக்கம் P231285 மூலமும் நீதி அமைச்சினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல்கள் சரியாக மேற்கொள்ள வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப் பிரமாணம் 137 | ரூபா 160,764 தொகை பெறுமதியான உறுதிச்சீட்டொன்றுக்காக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | தவறுதலாக இந்த உறுதிச் சீட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க ாததுடன், தற்போது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 262(2) | கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து உறுதிச் சீட்டுக்களும் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ‘‘செலுத்தப்பட்டது’’ என முத்திரை பதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தொகை ரூபா 727,917 இற்கான 08 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கும் போது நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து உறுதிச் சீட்டுக்களிலும் மற்றும் அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களிலும் ‘‘செலுத்தப்பட்டது’’ முத்திரை பதிக்கப்படுகின்றது என அறிவிக்கப்படுகின்றது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| iii. | நிதிப் பிரமாணம் 1645(அ) | மூன்று வாகனங்கள் தொடர்பாக பேணிச் செல்லப்படுகின்ற சம்பவக் குறிப்பேடுகளில் கொள்வனவு செய்யப்பட்ட தொகை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதி உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது சம்பவக் குறிப்பேடுகளில் வாகனங்களின் விபரங்கள் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 2(i) | நீதி அமைச்சிலிருந்து வழங்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று அறிக்கைத் திகதி வரை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீதி அமைச்சினால் சபைக்கு தற்காலிகமாக பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தை உரித்தாக்குவதற்கு அமைச்சின் ஆலோசனை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) பொது நிருவாக சுற்றறிக்கைகள் | | | |
| • 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 01 | ஒட்டுமொத்த பதவியணிக்குமாக வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகள் கையொப்பமிடல் 2018 ஆண்டு முதல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சபையினால் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை உடன்படிக்கை பணியாட்களுக்கு வழங்கப்பட்டு கையொப்பமிடலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க ாமையால் 2024 ஆண்டு முதல் அதனை தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| • 2008 பெப்ரவரி 06 திகதிய மற்றும் 2018 ஜனவரி 24 திகதிய இலக்கம் 05/2008 மற்றும் 05/2008(i) கொண்ட சுற்றறிக்கை | பொதுத் துறையின் தொழிற்பாடுகளை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு மற்றும் அதற்காக தொடர்புபடும் தரப்பினர் இடையே சிறந்த புரிந்துணர்வு ஒன்று மற்றும் ஒவ்வொருவரிடையே நம்பிக்கையை அதிகாரித்துக்கொள்வதற்காக பிரஜைகள் / பணியாட்கள் சாசனம் அறிமுகப்படுத்துதல் அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் பிரஜைகள் / பணியாட்கள் சாசனம் அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பிரஜைகள் சாசனம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை ஆவணப்படுத்தியிருக்கா ததுடன், 2024 ஆண்டு முதல் அதனை தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 114,231,765 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,480,748 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 112,751,017 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு 2023 ஆண்டில் பயன்பாட்டு பில் பத்திரச் செலவு ரூபா 28,220,885 தொகை, செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 6,223,290 தொகை மற்றும் ஏனைய சேவைகள் மற்றும் செலவுகள் ரூபா 2,557,901 தொகை அதிகரித்தலும், உரிய நியமங்களில் காணப்படாத பண்டங்களை விற்பனை செய்ததனால் கிடைத்த வருமானம் ரூபா 540,050 தொகையினால் குறைவடைதலும், பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004, 2006, 2008 ஆண்டுகள் மற்றும் 2010 ஆண்டின் ஆரம்பம் வரை கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 58,833,546 இற்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக அவற்றின் உளமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அட்டவணைகள் அல்லது ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 08 சொத்துக்களில் ஆரம்ப மீதிகள் காணப்பட்ட போதிலும் அந்த மீதிகளை உறுதிப்படுத்துவற்காக 2010 இற்கு முன்னர் உள்ள சொத்துக்களின் அட்டவணைகள் மற்றும் இன்வொயிஸ்கள் அழிவடைந்திருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்குரிய சான்றுகள் / அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.2.1 இன் படி குறைந்த அளவு 03 வருட காலங்களுக்காக எதிர்பார்ப்பு பெறுகை அலுவல்கள் அடங்கிய பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்வரும் 03 ஆண்டுகளுக்காக நீண்ட கால பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 6.2.2 இற்கு இணங்க உள்நாட்டு போட்டி அடிப்படையிலான விலைகூறல் அழைப்பின் போது குறைந்தது 21 நாட்கள் விலைகூறல் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்குவதற்கான பெறுகைக்கு 18 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், ஒருவர் மாத்திரமே விலைகூறல் சமர்ப்பித்திருந்தார். | எதிர் காலத்தின் பெறுகை அலுவல்களின் போது இவ்வாறான குறைபாடுகளை கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட கருமங்களை அவ்வாறு நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல் கேவையின் 7.3.1(ஈ) பெறுகை கைநூல் 2.8.4 மற்றும் 7.11.1 பந்திகளுக்கு இணங்க விலைகூறல்களை மதிப்பாய்வு செய்வதற்காக உசாத்துணை சேவை பெற்றுக்கொள்ளும் போது தொழிற்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தமது குழுவின் முறையான அறிக்கையொன்றுடன் உசாத்துணையாளர்களின் அறிக்கை பெறுகை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், உத்தியோகத்தர்களுக்காக ரூபா 955,900 தொகைக்கான சீருடைகள் கொள்வனவிற்கான பெறுகையின் போது விடயம் தொடர்பான அறிவுடைய ஒருவர் இன்றி தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்றின் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. மேலும், பெறுகை கைநூலின் 7.11.1 பந்திக்கு இணங்க இரத்துச் செய்யப்பட்ட விலைகூறல்கள் மற்றும் அதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டு விலைகூறல் மதிப்பாய்வு அறிக்கையொன்று, தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கையில் இது தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவுக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், குறிப்பிட்ட தொழில்நுட்பக் குழுவின் மதிப்பாய்வின் மீது அந்த பரிந்துரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இரத்துச் செய்யப்பட்ட விலைகூறல்களுக்கு போதியளவு காரணங்களுடன் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நெசவுத் தொழில் தொழில்நுட்பவியலாளர் / உத்தியோகத்தர் சீருடை தொடர்பான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.12.2(அ) பந்திக்கு இணங்க ஒரு விலைகூறல் மாத்திரம் கிடைத்த போதிலும், சந்தைப் பெறுமதியின் படி இணக்கமொன்று மேற்கொண்டு கூறுவிலைகள் நியாயமானவை என தீர்மானம் எடுக்க கூடியதாக இருந்த போதிலும் நீதிவான்களின் சிற்றுண்டிச்சாலைக்காக கூறுவிலைகள் அழைத்தல் விடுக்கப்பட்டது தொடர்பாக 2023 ஏப்ரல் 17 திகதி 08 வழங்குனர்களுக்கு கூறுவிலைகள் வழங்குவதற்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததுடன், ஒரு | பெறுகை வழிகாட்டல் கேவைக்கு இணங்க எதிர் காலத்தில் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குனர் மாத்திரம் பதிலளித்திருந்தமையால், இந்த பெறுகை தொடர்பாக சந்தைக் கூறுவிலைகளை ஒப்பீடு செய்திருக்கவில்லை. | | |
| (உ) | ஒப்பந்த வேலைப் பெறுமதி ரூபா 444,000 இற்கான நீதிவான்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தள திருத்த வேலையின் போது 2023 மார்ச் 14 மற்றும் 2023 ஜூன் 20 திகதி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மற்றும் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும், குறிப்பிட்ட கருமங்களை ஆரம்பிக்காமல் 2023 ஒக்தோபர் 03 திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி குறிப்பிட்ட கூறுவிலைகளின் செல்லுபடியாகும் காலம் மற்றும் விலைகூறல் பாதுகாப்பு முறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த காரணத்தினால் இந்த ஒப்பந்த வேலை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நீதிவான்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின் இடமாற்ற அலுவல்கள் தொடர்பாக நீதி அமைச்சின் தீர்மானம் பெற்ற பின்னர் 2023 ஒக்தோபர் 03 திகதி முகாமைத்துவச் சபை கூட்டத்திற்கும், குறிப்பிட்ட கூறுவிலை பத்திரங்களில் மற்றும் விலைகூறல் பாதுகாப்பு முறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த காரணத்தினால், சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனதனால் ஒப்பந்த வேலை வழங்குவதற்கு முடியாமல் போனதனால் இந்த பெறுகை இரத்துச் செய்யப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் கால தாமதம் இன்றி ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் (பொது தொழில் முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல் கோவை) பந்தி இலக்கம் 2.3 இன் அட்டவணை I இற்கு இணங்க மூலோபாய திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் மூலோபாயத் திட்டம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பந்தி 40(1) இற்கு இணங்க சபையின் உள்ளகக் | நியமனம் செய்யப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் 2023 ஜூன் 01 திகதி முதல் | குறிப்பிட்ட அதிகார சட்டத்திற்கு இணங்க உள்ளகக் |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்காக அந்த சபையின் ஆளுகை சபையினால் நியமனம் செய்யப்படுகின்ற தனது உள்ளக்க கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் 2023 ஜூன் 01 திகதி முதல் சபையின் பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் அடங்கியிருக்கவில்லை. மேலும், நிதிப் பிரமாணம் 134(3) இணங்க சபையின் நிதி விடயங்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான குறிப்பிட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், அறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையிலிருந்து விளகிச் சென்றிருந்தமையால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்க முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் எம்எஸ்டீடப்ளியூ/08/65 இலக்கம் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசி அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த கடிதத்திற்கு இணங்க சபையினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட்டிணைப்புக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை ஆவணப்படுத்தி அதற்காக தனியான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்தச் சட்டத்தின் படி 2024 ஆண்டு முதல் அதனை ஆவணப்படுத்தி செயற்படுத்துவற்கும் கூட்டிணைப்பு செய்வதற்கும் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கடிதத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |